

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 04-03-2025

# தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!

**“ஜனசங்கம் இங்கே (தென்னாட்டில்) தழைக்கவே முடியாது” என்று ‘சிகாகோ டெல்லி டைம்ஸ்’ நாளிதழுக்கு (9.10.1958) அளித்த பேட்டியில் பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். பா.ஜ.க.வின் தாய் அமைப்பு ஜனசங்கம். இவர்களது லட்சணம் இப்படித்தான் இருக்கும் என்று 1958 ஆம் ஆண்டே கணித்தார் அண்ணா. அதனால்தான் அவர் பேரறிஞர்.**

நமக்கு வாக்களிக்காதவர் வாழும் மாநிலத்துக்கு நாம் ஏன் உதவ வேண்டும் என்று பா.ஜ.க. நினைக்கிறது. தமிழ்நாடு பா.ஜ.க.வுக்கு வாக்களிக்கப் போவதும் இல்லை. பா.ஜ.க. தமிழ்நாட்டுக்கு உதவப் போவதும் இல்லை என்பதுதான் நிலைமை.

தமிழ்நாட்டைப் போராடும் நிலைமையில்தான் இன்னமும் ஒன்றிய பா.ஜ.க. அரசு வைத்திருக்கிறது. அது திருந்துவதாகத் தெரியவில்லை. எத்தனை அரசியல் அடிகளை வாங்கினாலும், அரசியல் பின்னடைவுகளை அடைந்தாலும் அதில் இருந்து பா.ஜ.க. தலைமை பாடம் கற்றுக் கொள்வதாகத் தெரியவில்லை.

ஆர்.என்.ரவியை எல்லாம் வைத்து ஆட்டம் காட்டும் பா.ஜ.க.வினருக்கு முன்புத்தியும் இல்லை. பின் புத்தியும் இல்லை என்பது நாளும் தெரிந்து கொண்டுதான் இருக்கிறது.

**“தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!”** – என்ற முழக்கத்தை முழங்கி இருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். அனைவரையும் முழங்க வைத்திருக்கிறார் முதலமைச்சர்.

**தமிழ்நாடு அரசு செயல்படுத்திவரும் பல்வேறு திட்டங்களுக்கு ஒன்றிய அரசானது, மாநில அரசின் கொள்கைகளுக்கு எதிரான நிபந்தனைகளை விதித்து, அத்திட்டங்களைச் செயல்படுத்துவதில் சிரமங்களை உண்டாக்குவதோடு மட்டுமல்லாமல், அத்திட்டங்கள் முடங்கும் சூழ்நிலையையும் உருவாக்கியுள்ளது. ஒருங்கிணைந்த கல்வி இயக்கத்தின் கீழ், ஒன்றிய அரசிடமிருந்து வரப்பெற வேண்டிய 2,152 கோடி ரூபாய் நிலுவையிலேயே உள்ளது. மும்மொழித் திட்டத்தை ஏற்றுக் கொண்டால்தான் இந்த நிதியைத் தருவோம் என நிபந்தனை போடுகிறார்கள். தேசிய உயர்கல்வி இயக்கத்தின் (RUSA) கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களின் மீதும் புதிய கல்விக் கொள்கையை ஒன்றிய அரசு திணிப்பதால், இத்திட்டங்களும் தற்போது முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.**

ஃபெஞ்சல் புயலானது ஏற்படுத்தியுள்ள பேரழிவுகளைக் குறிப்பிட்டு, தற்காலிக மற்றும் நிரந்தர நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகளுக்கு 6,675 கோடி ரூபாய் தேவைப்படும் என மதிப்பீடுகள் செய்யப்பட்டு, நிதி விடுவிப்புக் கோரிக்கை ஒன்றிய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆனால், இதுவரை எந்தவொரு நிதியையும் ஒன்றிய அரசானது விடுவிக்கவில்லை. மூன்று இயற்கைப் பேரிடர்களை தமிழ்நாடு சந்தித்துள்ளது. மாநில அரசு கோரிய 37,906 கோடி ரூபாயில் ஒருசதவீதம் கூட இதுவரை தரப்படவில்லை.

ஒன்றிய அரசு வீடுதோறும் குடிநீர் (Jal Jeevan Mission) என்ற திட்டத்தை வைத்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் வழங்க வேண்டிய 4,142 கோடி ரூபாயில், 732 கோடி ரூபாயை மட்டுமே வழங்கியுள்ளது. ஒன்றிய அரசின் திட்டமான பிரதமர் நகர்ப்புற வீட்டுவசதித் திட்டத்தின் (PMAY-U), கீழ் வழங்கப்படும் மானியத் தொகையானது, 2016 ஆம் ஆண்டு முதல் இன்று வரை, 1.5 இலட்சம் ரூபாயாகவே இருக்கிறது. இத்திட்டத்தினைச் செயல்படுத்திவரும் தமிழ்நாடு அரசானது, வீடு ஒன்றிற்கு 12 முதல் 14 இலட்சம் ரூபாயை தன்சொந்த நிதியின் மூலம் மானியமாகக் கொடுத்து வருகிறது. இப்படி பல்வேறு உதாரணங்களைச் சொல்ல முடியும்.

பொதுவாக ஒரு கட்சி, ஏதாவது சில நன்மைகளைச் செய்து காட்டுவதன் மூலமாக அந்த மக்களிடம் இருந்து வாக்குகளை வாங்க நினைக்கும். அந்தக் குறைந்தபட்ச அறிவு கூட பா.ஜ.க. தலைமைக்கு இல்லையே ஏன்? அவர்களுக்கு வாக்குகளை வாங்குவதை விட, ‘தமிழ்நாட்டுக்கு எந்த நன்மையும் செய்துவிடக் கூடாது’ என்பதுதான் உண்மையான நோக்கம். தமிழ்நாடு வளர்ந்து விடக் கூடாது, தமிழர்கள் வளர்ச்சியை அடைந்து விடக் கூடாது என்பதுதான் பா.ஜ.க. தலைமையின் கெட்ட எண்ணம் ஆகும்.

**தி.மு.க. அரசின் கொள்கைகள் வேறு. பா.ஜ.க.வின் அரசியல் கொள்கை முற்றிலும் வேறு. அரசியல் ரீதியான கொள்கைகளில் மட்டும் முரண்பட்டால் பரவாயில்லை. அந்த அரசியல் நோக்கத்தை நாம் புரிந்து கொள்ளலாம். ஆனால் வெள்ள நிவாரண நிதி தருவதில்லை, பள்ளிப் பிள்ளைகள் – ஆசிரியர்கள் நலனுக்கான நிதி தருவது இல்லை, மெட்ரோ இரண்டாம் கட்டப் பணிகளுக்கு நிதி தருவது இல்லை, பத்தாண்டுகளாக எய்ம்ஸ் மருத்துவமனையைக் கட்டுவது இல்லை என்று சொன்னால் என்ன பொருள்? தமிழ்நாட்டுக்கு எதுவும் கிடைத்துவிடக் கூடாது, எதுவும் தந்துவிடக் கூடாது என்ற சதிச் செயலை பா.ஜ.க. செய்கிறது.**

அரசியலாக மட்டுமல்ல, அக்கறையால் கூட தமிழ்நாட்டுக்கு எதையும் செய்துவிடக் கூடாது என்று நினைக்கிறார்கள். அதற்குக் காரணம் தமிழ்நாட்டை அவர்கள் ‘தீண்டத்தகாத மாநிலமாக’ பார்க்கிறார்கள். தமிழ்நாட்டுக்கு உதவினால் தமிழ்நாடு வளர்ந்துவிடும் என்பது ஒரு பக்கம். தமிழ்நாட்டைப் பார்த்து மற்ற மாநிலங்களும் வளர்ந்துவிடும் என்று பயப்படுகிறார்கள்.

இவர்கள் தமிழ்நாட்டை ஒதுக்க ஒதுக்கவே, தமிழ்நாடு அதிகமாக வளர்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேகமும், விவேகமும் இன்னும் அதிகமாகிறது. தமிழ்நாட்டு மக்கள் முன்னிலும் அதிகமாக அரசியல் விழிப்பைப் பெறுகிறார்கள். இந்த உணர்வானது தமிழ்நாட்டு எல்லைகளைக் கடந்து இந்தியாவின் பல்வேறு மாநிலங்களுக்குப் பரவி வருகிறது என்ற வகையில் பார்த்தால் பா.ஜ.க.வின் பழிவாங்கும் அரசியல், ஒருவித நன்மையையும் செய்கிறது.

**தமிழ்நாடு பேசிய சமூகநீதியை இன்று இந்தியா பேசுகிறது. தமிழ்நாடு பேசிய மாநில சுயாட்சியை இன்று இந்தியா பேசுகிறது. தமிழ்நாடு முழங்கி வரும் மொழிப்பற்றை இன்று இந்தியா முழங்கி வருகிறது.**

**தமிழ்நாட்டின் போராட்டமானது இந்தியாவை விழிப்படையும் போராட்டமாகவும் நடந்து கொண்டிருக்கிறது.**

**தமிழ்நாடு முதலமைச்சராகவும் அமர்ந்து தமிழ்நாட்டுக்காக போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தமிழ்நாட்டை அவர் வெல்ல வைப்பார். அது இந்தியா முழுமைக்குமான வெற்றிக்கும் பாதை அமைக்கும்.**

# இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம் – 7

## தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்... முதல் பக்கத் தொடர்ச்சி

மொழித் திணிப்பைக் கட்டாயமாக்குகிறார்கள்.

என் பிறந்தநாளில் தெலுங்கிலும் வாழ்த்துச் சொன்ன சகோதரி தமிழிசை அதனைத் தன் விருப்பத்தின் அடிப்படையில் செய்திருந்தால் எனக்கு மகிழ்ச்சியே. நவீன அறிவியல் தொழில்நுட்பத்தைக் கையாண்டுள்ள அவரைப் பாராட்டுவதுடன், மும்மொழி என்ன இன்னும் எத்தனை மொழிகளில் வேண்டுமானாலும் வாழ்த்துகளைத் தெரிவிக்கலாம்.

**ஒருவர் விரும்புகிற எந்த மொழிக்கும் நாங்கள் எதிரிகளல்ல. எந்த மொழியையும் எங்கள் மீது திணிக்காதீர்கள்.**

ஒருவர் விரும்புகிற எந்த மொழிக்கும் நாங்கள் எதிரிகளல்ல. எந்த மொழியையும் எங்கள் மீது திணிக்காதீர்கள் என்பதைத்தான் அன்று முதல் இன்று வரை தெளிவாகச் சொல்கிறோம். ஆறறிவு கொண்ட அனைவருக்கும் இது புரிகிறது. ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியாளர்களுக்கு மட்டும் ஏன் புரியவில்லை? புரியாமல் இல்லை. புரியாதது போல பாசாங்கு செய்கிறார்கள். அவர்களின் நோக்கம் ஏதேனும் மூன்று மொழி என்பதல்ல.

சிறுபான்மை சமுதாய மக்களுக்கான உருது மொழியும், அண்டை மாநிலங்களில் பேசப்படும் தெலுங்கு, கன்னட மொழிகளும் நம்முடைய கல்விக் கொள்கையின்படி இங்குள்ள சிறுபான்மை மொழிப் பள்ளிகளில் கற்றுத் தரப்படுகின்றன. இந்த மொழிகள் எதுவும் மற்றவர்கள் மீது ஆதிக்கம் செலுத்துக் கூடியதல்ல. ஆனால், **பா.ஜ.க.வின் நோக்கமே தமிழ்நாட்டில் ஆதிக்க இந்தியையும் சமஸ்கிருதத்தையும் கட்டாயமாகத் திணிக்க வேண்டும் என்பதுதான். அதனால்தான் இந்தி படிக்க தமிழ்நாட்டில் உள்ள மாணவர்களுக்கு ஏன் வாய்ப்பு ஏற்படுத்தித் தரவில்லை என்று கரிசனம் வழிவதுபோல கேட்கிறார்கள்.**

தி.மு.க.வினர் நடத்தும் பள்ளிகளில் மட்டும் இந்தி கற்றுத்தரப்படுகிறது என்று விமர்சனம் செய்கிறார்கள். பரம்பரை பரம்பரையாகவே கல்வி வியாபாரம் செய்யும் பா.ஜ.க.குடும்பத்தினர் பற்றிய பட்டியலை வெளியிட்டு பதிலுக்குப் பதில் பேசுவது நமது நோக்கமல்ல. உரிய அனுமதியுடன் எந்தக் கட்சியை சார்ந்தவர்களும், எந்தவொரு கட்சியையும் சாராதவர்களும் பள்ளிக்கூடங்களை நடத்த முடியும். தி.மு.க.வினரில் மாநில அரசின் பாடத்திட்டத்தின் கீழ் தனியார் பள்ளிகளை நடத்துகிறவர்களும், ஒன்றிய அரசின் சி.பி.எஸ்.இ. பாடத்திட்டத்தின் கீழ் பள்ளிகளை நடத்துகிறவர்களும் உரிய அனுமதியுடன்தான் நடத்துகிறார்கள். தனியார் சி.பி.எஸ்.இ. பள்ளிகளில் இந்தி கற்றுத் தரப்படுகிறது என்றால் அதற்கு காரணம் ஒன்றிய அரசின் கல்விக்கொள்கைதானே தவிர, தி.மு.கவினரோ வேறு எந்தக் கட்சியினரோ தனிப்பட்ட முறையில் காரணமாக மாட்டார்கள்.

தமிழ்நாடு அரசின் பாடத்திட்டத்தின் கீழ் செயல்படும் ஆயிரக்கணக்கான தனியார் பள்ளிகள் எதிலும் மும்மொழித் திட்டம் கிடையாது. இந்தி மொழி என்பது கட்டாயமுமில்லை. அந்த மொழியில் தேர்வு நடத்தப்படுவதுமில்லை. இது தெரிந்திருந்தும் அரசியல் நோக்கத்துடன் பேசும் பா.ஜ.க. நிர்வாகிகள், “தனியார் பள்ளியில் படிக்கும் பணக்கார குடும்பத்து மாணவர்களுக்கு கிடைக்கும் இந்தி படிக்கும் வாய்ப்பு, ஏழை மாணவர்களுக்கு ஏன் வழங்கப்படவில்லை?” என்று ஏதோ தமிழ்நாட்டு ஏழை மாணவர்கள் மீது இவர்களுக்கு மட்டும்தான் அக்கறை உள்ளது போல வேடம் போடுகிறார்கள்.

**தமிழ்நாட்டு ஏழை மாணவர்கள் மீது இவர்களுக்கு மட்டும்தான் அக்கறை உள்ளது போல வேடம் போடுகிறார்கள்.**

**பா.ஜ.க. ஆட்சி செய்கின்ற இந்தி பேசும் மாநிலங்களில் உள்ள அரசுப் பள்ளிகளை விட, தமிழ்நாட்டில் இந்திக்கு இடமில்லாத இருமொழிக் கொள்கை வழியிலான அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளின் தரம் உயர்ந்தே இருப்பதை ஒன்றிய அரசின் புள்ளிவிவரங்களே தெரிவிக்கின்றன.**

மாணவ சமுதாயத்தினருக்குத் தேவையான நவீனக் கல்விக் கட்டமைப்புடன் தரமான வகுப்பறைகள்-பாடங்கள் – காலை சிற்றுண்டி – மதிய உணவு – விளையாட்டு மேம்பாடு உள்ளிட்ட வசதிகளுடன் தமிழ்நாட்டு அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் சிறப்பாக செயல்படுவதை பிற மாநில கல்வித்துறையினரும் பார்வையிட்டு பாராட்டிச் செல்கிறார்கள். மாணவர்களின் மீது மொழித் திணிப்பு எனும் சுமையை ஏற்றாமல், திறன் மேம்பாடு என்கிற வாய்ப்பை வழங்குவதுதான் திராவிட மாடல் அரசின் கல்வித் திட்டம்.

இந்தியாவின் தென்மாநிலங்களில் உள்ளவர்கள் இந்தி மொழியைக் கற்பதும், வட மாநிலத்தவர்கள் தென்னிந்திய மொழிகளில் ஒன்றைக் கற்பதும் தேச ஒற்றுமைக்கு வழிவகுக்குமென காந்தியடிகள் நம்பினார். அவருடைய விருப்பத்தின் அடிப்படையில் உருவானதுதான் தட்சிண பாரத இந்தி பிரச்சார சபா. சென்னையில் உள்ள அதன் தலைமை நிலையத்திற்கு காந்தியடிகளே நேரில் வந்து நிகழ்வுகளில் பங்கேற்றிருக்கிறார். தற்போது 6000 மையங்களுடன் தென்மாநிலங்கள் முழுவதும் இந்தி பிரச்சார சபா இயங்கி வருகிறது.

**கோட்சே வழியைப் பின்பற்றும் இயக்கத்தினர் காந்தியின் நோக்கத்தை ஒரு போதும் நிறைவேற்ற மாட்டார்கள்.**

**தென்னிந்தியர்கள் இந்தியைக் கற்க தட்சிண பாரத இந்தி பிரச்சார சபா நிறுவப்பட்டதுபோல, வடஇந்தியாவில் தென்னிந்திய மொழி ஒன்றைக் கற்றுக்கொள்ள உத்தர பாரத தமிழ் பிரச்சார சபாவையோ, திராவிட பாஷா சபாவையோ நிறுவ முடிந்ததா?**

வள்ளுவர் சிலையை கங்கை கரையில் நிறுவுவதாக சொல்லி குப்பை மேட்டில் போட்டவர்களா தமிழ் கற்றுத் தருவதற்கான அமைப்பை நிறுவப் போகிறார்கள்? கோட்சே வழியைப் பின்பற்றும் இயக்கத்தினர் காந்தியின் நோக்கத்தை ஒரு போதும் நிறைவேற்ற மாட்டார்கள்.

சென்னை மாகாணம் என்ற பெயர் இருந்த காலத்திலேயே‘தமிழ்நாடு காங்கிரஸ்’ என்று பெயர் வைக்கச் செய்தவர் காந்தியடிகள். தமிழ்நாட்டில் தற்போது ஓடும் ரயில்களுக்கு கூட இந்தி – சமஸ்கிருதப் பெயர்களை வைப்பவர்கள் ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியாளர்கள். தமிழையும் பிற மொழிகளையும் அழிப்பதுதான் அவர்களின் ரகசியத் திட்டம். அதை வெளிப்படையாக எதிர்க்கும் வலிமை கொண்டதுதான் திராவிட இயக்கம்.

*(தொடரும்)*

**அன்புடன்**

**மு.க. ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2056
மாசி 19
03.03.2025

# தொகுதி மறுசீரமைப்பு: ஒன்றிய அரசு விளக்கம் அளிக்க வேண்டும்!

## கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. வலியுறுத்தல்!

சென்னை, மார்ச் 4 –

மக்களவைத் தொகுதி மறுசீரமைப்பு எந்த அடிப்படையில் நடைபெறும் என்பது குறித்து ஒன்றிய அரசு விளக்கம் அளிக்க வேண்டும் என்று நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் எக்ஸ் தளத்தில் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட விடியோ பதிவு :

கோவையில் நடைபெற்ற கூட்டத்தில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, மக்களவைத் தொகுதி மறுசீரமைப்பில் தமிழகம் எந்த ஒரு தொகுதியையும் இழக்காது என்று கூறியுள்ளார். தொகுதி மறுசீரமைப்பில் தமிழகத்தின் மக்களவைத் தொகுதிகள் குறைய வாய்ப்பு இருக்கிறது என்று முதல்வர்



மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறியதற்கு விளக்கம் அளிக்கும் வகையில் அமித்ஷா அவ்வாறு கூறியுள்ளார்.

அதேநேரம் விகிதாசார அடிப்படையில் தமிழகத்தின் தொகுதிகள், அதே அளவில் இருக்கும் எனவும் அவர் கூறியுள்ளார். இந்த விகிதாசார அடிப்படையில் என்றால், எந்த அடிப்படையில் என்று தமிழக பா.ஜ.க. தலைவர்களுக்குக்கூட தெரியவில்லை. ஒன்றிய அரசுதான் விளக்க வேண்டும் எனவும் அவர்கள் கூறுகின்றனர்.

மக்களவைத் தொகுதி மறுசீரமைப்பு குறித்து முதல்வர் எழுப்பியுள்ள விவகாரம் தமிழகத்துக்கும், தென் மாநிலங்களுக்கும் மிக முக்கியமான பிரச்சினையாகும். ஒருவேளை மக்கள்தொகையின் அடிப்படையில் தொகுதிகள் மறுசீரமைப்பு செய்யப்பட்டால், தமிழகம் 10 தொகுதிகள் வரை இழக்க வாய்ப்பு உள்ளது.

தென் மாநிலங்களும், இந்தியாவில் வேறு சில மாநிலங்களும் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தியுள்ளன. ஆனால், மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தாத மாநிலங்கள் அதிக தொகுதிகளைப் பெறும் சூழல் உள்ளது. இதுவரை மக்கள் தொகை அடிப்படையில்தான் மறுசீரமைப்பு நடைபெற்று வந்துள்ளது. அதனால், மக்கள் தொகை அடிப்படையில் மறுசீரமைப்பு என்பது, மக்கள் தொகையைக் கட்டுப்படுத்திய மாநிலங்களுக்கு அநீதியாகவே இருக்கும்.

எனவே, மறுசீரமைப்பு எந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட உள்ளது என்பது குறித்து தெளிவு வேண்டும். இது தொடர்பாக ஒன்றிய அரசு, பிரதமர், உள்துறை அமைச்சர் தெளிவான அளிக்க வேண்டும். விளக்கத்தை மக்கள்தொகையை முறையாக கட்டுப்படுத்திய எந்த ஒரு மாநிலமும் அதனுடைய தொகுதிகளை இழக்காது என்கிற உறுதியையும் ஒன்றிய அரசு தரவேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.